


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*




VOL - 3 ISSUE - 12 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com



## வேளச்சேரி சேவா நகரில் தொடங்கப்பட்டுள்ள Covid-19 தடுப்பூசி மையம்...

இலவசமாக Covid-19 தடுப்பூசி தமிழக அரசால் போடப்படுகிறது. தமிழக அரசு பொது மக்களுக்கு Covid-19 தடுப்பூசி 80 வயது உள்ளவர்களுக்கு முதல் தடுப்பூசி போட்டுக்கொள்ள அறிவுறுத்தப் -பட்டனர். இந்த ஊசியின் விலை 250.ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டது.

அனைத்து அரசு பொது மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனையில் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. தற்போது தனியார் மருத்துவமனையை தவிர அரசு சுகாதார மருத்துவ மனைகளில் 45 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் இலவசமாக Covid-19 தடுப்பூசி போட்டு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. ஊசி போட்டுக்கொள்ள நினைப்பவர்கள் தங்களது ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஓட்டுனர் உரிமம் ஏதாவது ஒரு நகலை எடுத்து செல்ல வேண்டும். இதை தவிர இருதய நோய் உள்ளவர்கள் அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள் உங்கள் மருத்துவரை அணுகி ஒப்புதல் பெற்றுக்கொண்ட பின்பு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.



செவ்வாய்க்கிழமை அன்று நமது வேளச்சேரி காந்தி ரோடு சேவா நகரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் Covid-19 தடுப்பூசி மையம் தொடங்கப்பட்டது. நேரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை Covid-19 தடுப்பூசி பொது மக்கள் போட்டுக்கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதன் முதலாக Covid-19 தடுப்பூசி போட்ட நபர் M.பாலகிருஷ்ணன் பொதுச்செயலாளர் டான்சி நகர் நல்வாழ்வு சங்கம்.

**Commercial Space for Rent**
650 Square feet for
23,000/- @ first floor
*Diya Complex,*
*Vijayanagar Main Road, Velachery*
*(Near Ananda Bhavan)*
6 month rent as advance
**CONTACT- 7305837388**

**Commercial Space for Rent**
850 Square feet for
27,000/- @ Ground floor
*Diya Complex,*
*Vijayanagar Main Road, Velachery*
*(Near Ananda Bhavan)*
2 L as advance
**CONTACT- 7305837388**

To Advertise about
Rental House, Land Sales
& Job Vacancy
Pay Rs. 150/- Only

**WOMAN'S HEALTH YOGA CENTRE**
YOGA AEROBIC ZUMBA
Yoga Pranayam Classes
Yoga Meditation Classes
Yoga Classes For Woman
Yoga Classes For Men
Yoga Classes For Children
Therapeutic Yoga Classes
Hatha Yoga Classes
Yoga Classes For Diabetes
Corporate Yoga Consultants
Yoga Classes For Weight Loss
**Yoga Classes At Home**
Contact : 9444 122 922
*(Separate Classes for LadiesLadies Teachers Available)*
**Branches :**
❖ Velachery ❖ Palvakkam (OMR) ❖ Navalur ❖ PTC

## தூசி, புழுதியுமாக காட்சியளிக்கிறது வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலையம்...



வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலையம் அருகில் இருக்கும் மேம்பாலம் பல வருடங்களாக கட்டப்படாமல் இருக்கிறது. ஆகையால் போக்குவரத்து நெரிசல் காரணமாக வேலைக்குச் செல்லும் மக்கள் மற்றும் பள்ளி கல்லூரிகள் செல்லும் மாணவர்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் அந்த பகுதி சாலைகள் மேடும் பள்ளமுமாக இருக்கின்றன. மிகவும் தூசியும் புழுதியுமாக அந்த பகுதி காட்சியளிக்கிறது.



எனவே இதனை சென்னை மாநகராட்சி கருத்தில் கொண்டு விரைவில் இந்த சாலையை சீர் செய்யுமாறும் மற்றும் மேம்பால பணியை முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**TOLET RENT VELACHERY**
**350 Square feet,**
**Rent 8,000/-**
**INDEPENDENT HOUSE**
*Working women 1or 2 Girls*
**350 சதுர அடி குடோன் வாடகைக்கு (Purpose)**
**Provision Store**
**எண்ணெய் குடோன்**
**அரிசி குடொன்**
**மருந்து குடோன்**
*(Tuition Centre, Office Rent Negotiable)*
**Contact- 7397354283**

உ
ஓம் நமச்சிவாய




**ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயம்**
வேளச்சேரி விஜயநகர் பக்த சமாஜ் (பதிவு)
**மகா சிவராத்திரி மஹோத்சவம்**
நாள் : 07.03.2021 முதல் 11.03.2021 மணி

நிகழ்ச்சி நிரல்

| தேதி | நேரம் | விவரம் |
|---|---|---|
| 07.03.2021 ஞாயிறு | காலை 8.00-12.00 மணி வரை | பசு பூஜை விஜயநகர் பிரார்த்தனை ருத்ர பாராயணம் |
| | மாலை 4.00-6.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| 08.03.2021 திங்கள் | காலை 8.00-12.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| | மாலை 4.00-6.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| 09.03.2021 செவ்வாய் | காலை 7.00-12.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| | மாலை 4.00-6.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| 10.03.2021 புதன் | காலை 10.00-12.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| | காலை 6.00-10.00 மணி வரை | ருத்ர ஹோமம் |
| | மாலை 4.30 மணிக்கு | வழக்கம் போல் பிரதோஷ வழிபாடு நடைபெறும் |
| | மாலை 6.00-7.00 மணி வரை | மாட வீதி உலா கைலாச வாத்யத்துடன் |
| 11.03.2021 வியாழன் | காலை 8.00-10.00 மணி வரை | ருத்ரபாராயணம் |
| | காலை 10.00-12.00 மணி வரை | ம்ருத்யுஞ்சய ஹோமம் |
| | மாலை 5.30-12.30 மணி வரை | சொற்பொழிவு, நாமசங்கீர்த்தனம் |
| | மாலை 8.00-10.30 மணி வரை | முதல் கால அபிஷேகம் |
| | 11 முதல் 12.00 மணி வரை | இரண்டாம் கால அபிஷேகம் |
| | இரவு 1.30 மணி வரை | மூன்றாம் கால அபிஷேகம் |
| 12.03.2021 வெள்ளி | காலை 3.30 மணிக்கு | நான்காம் காலம் அபிஷேகம், கால பைரவர் பூஜை |
| | காலை 8.00-10.30 மணி வரை | ஸ்வாமி திருவீதி உலா |
| | காலை 8.00 மணி முதல் | உபயதாரர் பிரசாதம் வழங்கப்படும் |

**அனைவரும் வருக!! ஈசன் அருள் பெறுக!!**

**HONEY BEE MUSIC ACADEMY**
**9840960638**
**Keyboard**
**Flute**
**Vocal**
**Singing**
**Chess**



## யோகாசனம்

## உட்கட்டாசனம்



விளக்கம் : நாற்காலி போல் உடலை அமைப்பது 'உட்கட்டாசனம்' ஆகும்.

நின்ற நிலையில் இரண்டு கால்களையும் மடித்து நாற்காலி போல் உடலை அமைக்க வேண்டும். இரு கைகளையும் நேராக நீட்டவும்.

பயன்கள் :

- ❖ இந்த ஆசனத்தை ஒரு நிமிடம் செய்தால் ஒரு கிலோ மீட்டர் நடந்து சென்று வந்த பலனை அடைய முடியும்.
- ❖ பாதவீக்கம் நரம்பு வெரிக்கோஸ் குணமாகும்.
- ❖ தொடைப் பகுதியில் எடை குறையும்.

## பௌர்ணமியும் - சிறப்பும்...

சித்ரா பௌர்ணமி : சித்ரகுப்தன் அவதரித்த நாள்.

வைகாசி பௌர்ணமி : முருகன் அவதரித்த நாள்.

ஆனி பௌர்ணமி : இறைவனுக்கு கனிகளை படைக்கும் நாள்.
ஆடி பௌர்ணமி : திருமால் வழிபாடு.

ஆவணிப் பௌர்ணமி : ஓணம், ரக்ஷாபந்தன்.

புரட்டாசி பௌர்ணமி : உமாமகேஸ்வர பூஜை.

ஐப்பசி பௌர்ணமி : சிவனுக்கு அன்னாபிஷேகம்.

கார்த்திகை பௌர்ணமி : திருமால் பிரம்மா ஆகியோர் சிவபெருமானின் அடிமுடி காண முயன்ற நிகழ்வு.

மார்கழி பௌர்ணமி : சிவபெருமான் நடராஜராக ஆனந்த தாண்டவம் ஆடிய நாள்.
தை பௌர்ணமி : சிவபெருமானுக்கு பெருவிழா நடக்கும் நாள்

மாசி பௌர்ணமி : பிரம்மனின் படைப்புத் தொழில் தொடங்கிய நாள்.
பங்குனி பௌர்ணமி : சிவபெருமான் உமையம்மையின் திருமண நாள்.

## கீரையின் பயன்கள்:

♦ அகத்திக்கீரை இரத்தத்தை சுத்தமாக்கி பித்தத்தை தெளியவைக்கும்.

♦ காசினிக்கீரை சிறுநீரகத்தை நன்கு செயல்பட வைக்கும். உடல் வெப்பத்தை தணிக்கும்.

♦ சிறு பசலைக் கீரை சரும நோய்களை தீர்க்கும். பால்வினை நோயை குணமாக்கும்.

♦ பசலைக்கீரை தசைகளை பலமடைய செய்யும்.

♦ கொடிப்பசலைக் கீரை பெண்களுக்கு வெள்ளைப் படுவதை குணப்படுத்தும். மேலும் நீர் கடுப்பை குணப்படுத்தும்.

♦ மஞ்சள் கரிசலை கீரை கல்லீரலை வலுவாக்கும். மஞ்சள் காமாலையை குணப்படுத்தும்.

♦ புதினா கீரை இரத்தத்தை சுத்தம் செய்யும், அஜீரணத்தை குணப்படுத்தும்.

# இந்த வார ராசிபலன்



### மேஷம்

மன அழுத்தத்திற்கான காரணங்களை நிவர்த்தி செய்யுங்கள். ஏனென்றால் இதன் மூலம் மட்டுமே உங்களை ஆரோக்கியமாகவும் ஆற்றலுடனும் வைத்திருப்பதில் வெற்றி பெறுவீர்கள்.



### துலாம்

இந்த வாரம் நீங்கள் வெளிநாட்டில் வியாபாரம் செய்தால், பொருளாதார நன்மைகளைப் பெறுவதில் நீங்கள் மகத்தான வெற்றி பெற வாய்ப்புள்ளது.



### ரிஷபம்

இந்த வாரம், உங்கள் நிலையை விட மற்றவர்களுக்கு முன்னால் செலவிடுவது மிகவும் முட்டாள்தனம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



### விருச்சிகம்

இந்த நேரத்தில் நீங்கள் ஏதாவது முதலீடு செய்ய விரும்பினால், முதலில் யதார்த்தங்களை மதிப்பிட்டு பின்னர் முதலீடு செய்யுங்கள். இல்லையெனில் உங்கள் பணம் சிக்கிக்கொள்ளும்.



### மிதுனம்

இந்த வாரம் முழுவதும் உங்கள் நிதி வாழ்க்கை நன்றாக இருக்கும். இந்த நேரத்தில் கிரகங்களின் செல்வாக்குடன், பணம் சம்பாதிக்க உங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும்.



### தனுசு

இந்த வாரம் உங்கள் உணவை மேம்படுத்த வேண்டும். இல்லையெனில் நீங்கள் பல கடுமையான நோய்களால் பாதிக்கப்படுவீர்கள். இது உங்களுக்கு சிக்கலை ஏற்படுத்தக்கூடும்.



### கடகம்

இந்த வாரம், உங்கள் மீது கூடுதல் வேலை சுமை உங்கள் ஆரோக்கியத்தை சீர்குலைக்கும். இது போன்ற சூழ்நிலையில், உங்கள் உடலுக்கு சிறிது ஓய்வு கொடுங்கள்.



### மகரம்

இந்த வாரம் சிறந்த வாழ்க்கை வாழ, உங்கள் ஆரோக்கியத்தையும் ஆளுமையையும் மேம்படுத்த நீங்கள் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும்.



### சிம்மம்

இந்த வாரத்தில் அலுவலகத்தில் இருக்கும் அதிகப்படியான வேலையால் குடும்ப மகிழ்ச்சியை இழக்கக்கூடும். இந்த வாரம் உங்கள் வசதிகளில் அதிகரிப்பு ஏற்படலாம்.



### கும்பம்

ஒரு குடும்ப உறுப்பினரின் உடல்நிலை தொடர்பான எந்தவொரு செய்தியையும் இந்த வாரம் நீங்கள் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மன அழுத்தத்திற்கும் பலியாகலாம்.



### கன்னி

இந்த வாரம் நிதி வாழ்க்கையில் வரும் பல சிக்கல்கள் உங்கள் உடல்நல வாழ்க்கையிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.



### மீனம்

இந்த வாரம் அலுவலகத்தில் இருக்கும் அதிகப்படியான வேலையால் நீங்கள் மன அழுத்தத்திற்கு ஆளாவீர்கள். உங்கள் ஆரோக்கியத்தை கவனிக்க வேண்டும்.

# India, 17- countries face U.S. Anti-dumping tax

The U.S. Department of Commerce is preparing to tax aluminium sheet exporters from 18 countries after determining on Tuesday that they had benefited from subsidies and dumping.

The US International Trade Commission (ITC), an independent body, must approve the final decision by April 15 to impose anti-dumping or countervailing duties, a department statement said.

The investigation, launched under the Donald Trump administration, had been requested by nearly a dozen U.S. aluminium alloy manufacturers, including Arconic and Aleris Rolled products, which felt they were being harmed by competing imports at lower prices.

President Joe Biden's administration determined that imports from Germany in particular ($287 million in 2019) benefited from dumping ranging from 40% to 242%.

The same is true for aluminium alloy sheets from Bahrain ($241 million), which the administration said benefited from pricing below the cost of production or the local market of 83%. Imports from India ($123 million in 2019) have benefited from subsidies for 35% to 89%, according to the U.S. Investigation.

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்





| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹93.11 | ₹86.45 |

## திருக்குறள்

தமிழ்

14. ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

**English**

**If clouds their wealth of waters fail on earth to pour,
The ploughers plough with oxen's sturdy team no more.**

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,216 | 1 கிராம் ₹ 4,599 |
| | 8 கிராம் ₹ 33,728 | 8 கிராம் ₹ 36,792 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 70.10 | |
| | 1 கிலோ ₹ 70,100 | |

## ஆல்பர்ட் ஃவெர்ட் (Albert Fert) பிறந்த தினம் இன்று மார்ச், 07 - 1938



ஆல்பர்ட் மார்ச், 07 - 1938ல் பிறந்தார். இவர் ஒரு பிரெஞ்ச்சு இயற்பியலாளர் ஆவார். ஆல்பர்ட் 1962ல் பிரான்சில், பாரிசில் உள்ள ஈக்கோலே நோர்மாலெ சுப்பீரியெர் (Ecole normale superieure) பயின்று பட்டம் பெற்றார். பின்னர் 1963ல் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டம் பெற்றார். அதன் பின்னர் 1970ல் தென் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் (Universite Paris-Sud) முனைவர் ஆய்வுப்பட்டம் (பி. ஹெச். டி) பெற்றார்.

இவரும் ஜெர்மானிய இயற்பியலாளர் பீட்டர் குருன்பெர்க் (Peter Grünberg) என்பாரும் முதன்முதலாக 1988ல் மாபெரும் காந்தமின்தடைமம் என்னும் ஒரு புது இயற்பியல் விளைவைக் கண்டுபிடித்தனர். இவ்விளைவே இன்று கணினிகளில் பயன்படும் கிகாபைட் காந்த வன்தட்டு நினைவகங்களில் பயன்படுத்தப்படுகின்றது. இக் கண்டுபிடிப்புக்காக இவ்விருவருக்கும் 2007ஆம் ஆண்டுக்கான **இயற்பியல் நோபல்** பரிசு வழங்கப்பட்டது. இவர் தற்பொழுது பிரான்சில் ஆர்சே (Orsay) என்னுமிடத்தில் உள்ள தென் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றுகிறார். பிரெஞ்ச்சு நாட்டு நடுவண் அறிவியல் ஆய்வகமும் தாலெ குழு (Thales Group) என்னும் நுண்மின்கருவி தொழிலகமும் இணைந்து நடத்தும் ஓர் ஆய்வகத்தின் இயக்குனராகவும் பணியாற்றி வருகின்றார்.


## பொன்மொழிகள்

கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல,
தன் குற்றங்களை உணராதவனே குருடன்

- மகாத்மா காந்தி

# Chutties Corner

படத்தில் உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...!





Find 6 Differences ?

வண்ணம் தீட்டுக



☆☆☆☆☆

5 Star ratings from your parents

## BIRTHDAY WISHES



Madhulika
March 7



Monica
March 11



R. Sindiya,
March - 12




Cozy Bean Bags


Park yourself comfortably

- VELACHERY
- TARAMANI
- ANNANAGAR
- URAPAKKAM


LEADING BEAN BAG MANUFACTURER


Contact : 93839 78910 / 93822 18477


## PAPER CRAFT



## தனித்திறமை பகுதி







S. Siddharth
Urapakkam



Joshua
Velachery


Nellai Machãnin

RUSIKKARAN™

RESTAURANT | CATERING SERVICE | VEG & NON VEG

37F | VELACHERY TO TAMBARAM MAIN ROAD | VIJAY NAGAR
VELACHERY | CHENNAI 600 042 | TN | MOBILE 759 825 6999

Email:rusikkaran@gmail.Com





Cell : 98412 99770
98412 80515

P.R. MOTORS

Buying & Selling All New / Used Vehicle with
Finance Arrangement on Commission Basis only

BAJAJ HERO HONDA TVS YAMAHA

No.37/F, Velachery Main Road, Vijayanagar, Chennai - 42.


## பழமொழி (PROVERB)

Hear more, but talk less.

அதிகம் கேள், குறைவாகப் பேசு.

உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.


CIN: U60210TN2020PTC134769

SML CHENNAI CARS PVT LTD

Drive The World

ONE STOP DESTINATION FOR ALL YOUR CAR NEEDS



No 37 F, Vijaya Nagar Road, velachery, Chennai-600042.
Email: chennaicars555@gmail.com | www.chennaicar.in
Ph. 044 42106600 | 91504 72441



நாவில் நடனமாடும் சுவைக்கு...





கங்கா ஸ்வீட்ஸ்

GANGA SWEETS

PURE GHEE SWEETS

Mail us @ gangasweets@gmail.com
Visit us @ www.gangasweets.com

HEAD OFFICE
Tel.: 4264 5911 / 2615 4635

BRANCHES

Anna Nagar Blue Star
4263 3086

Anna Nagar West Extn.
4264 5917

Anna Nagar 1st Main Road
4350 0998

Thiruvanmiyur
4230 0911

Velachery
4232 5234

Pallavaram
4207 3157

Kolathur 4286 6809/10




உ

முப்பிடாரி முத்துமாலை அம்மன் துணை     பத்ரகாளி அம்மன் துணை

ஸ்ரீ தேவி நாடார் திருமண தகவல் மையம்

வாருங்கள் இணைப்போம்!



திருமண மேளம் முழங்கிட செய்வோம்!

இந்து நாடார் இன மணமகன் - மணமகளின் பெற்றோர் விருப்பத்திற்கேற்ப பொருத்தமான நல்ல வரன்களின் ஜாதக தகவல்களை தந்து, சேவை கட்டணம் பெரும் கைராசியான திருமண தகவல் மையம். பதிவு கட்டணம் 1000/- மட்டுமே உள்நாட்டில் பணிபுரியும் டாக்டர்கள், இன்ஜினியர்கள் மற்றும் வியாபாரிகளின் ஜாதகங்கள் மட்டுமின்றி வெளிநாட்டில் பனிபுரிபவர்களின் ஜாதகங்களை பற்றிய தகவல்களும் இவ்விடம் கிடைக்கும்.

அமைப்பாளர்கள் :
A. பிருந்தாதேவி
G. செல்வி

9841638387
9791370555
9080840288

# ஜோ பைடன் துணை உதவியாளராக அமெரிக்க வாழ் இந்தியர் நியமனம்

அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் துணை உதவியாளராகவும்,வெள்ளை மாளிகை ராணுவ அலுவலக இயக்குனராகவும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மஜூ வர்க்கீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மஜூ வர்க்கீஸ், கேரளாவை பூர்வீகமாக கொண்டவர். இவர், அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக களம் இறங்கிய ஜோ பைடனின் பிரசார நடவடிக்கைகளுக்கான தலைமை செயல் அதிகாரியாகவும், மூத்த ஆலோசகராகவும் செயல் -பட்டார். தேர்தல் வெற்றிக்கு பின்னர் அதிபர் ஜோ பைடன், துணை அதிபர் கமலா ஹாரிஸ் பதவி ஏற்ப்புக்கான ஏற்பாடுகளை கவனித்த துவக்க குழுவின் நான்கு உறுப்பினர்களில் ஒருவராகவும்பணியாற்றினார். இந்நிலையில் மஜூ வர்க்கீஸ், அதிபர் ஜோ பைடனின் துணை உதவியாளராகவும், வெள்ளை மாளிகை ராணுவ அலுவலக இயக்குனராகவும் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் முன்னாள் அதிபர் ஒபாமா ஆட்சிக் காலத்திலும் வெள்ளை மாளிகையில் பல பொறுப்புகளில் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.








# இயற்கை அழகு குறிப்பு

♦ முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வந்துவிடும்.

♦ சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் இருக்க கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்து வந்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் இருக்கும்.

♦ சருமம் நிறம் அதிகரிக்க ஆப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் செர்த்து கலந்து முகம்,கழுத்து,கை, வெளியில் தெரியும் பாகம் முழுவதும் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் தோலின் நிறம் மாறி அழகைக்கூட்டும்.

♦ கருவளையம் நீங்க ஆரஞ்சு பழத்தின் சக்கையை கண்கள் மீது அரைமணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போகும்.

தெரிந்துக்கொள்ளுங்கள்:

## விநாயகர் பற்றிய அரிய தகவல்கள்



"வி" என்றால் இதற்கு மேல் இல்லை எனப் பொருள். "நாயகர்" என்றால் தலைவர் எனப் பொருள். இவருக்கு மேல் பெரியவர் யாருமில்லை என்று பொருள்பட விநாயகர் என்று பெயரிடப்பட்டது.

கணபதி எனும் சொல்லில் "க" என்பது ஞானத்தை குறிக்கிறது. "ண" என்பது ஜீவர்களின் மோட்சத்தை குறிக்கிறது. "பதி" என்னும் பதம் தலைவன் எனப்பொருள்படுகிறது.




## உங்களுக்கு தெரியுமா?



குதிரையின் மேல் வீரர்கள் அமர்ந்து இருக்கும் சிலைகளை நிறுவும் விடயத்தில் ஒரு மரபு இருக்கிறது. குதிரையின் நான்கு கால்களும் கீழே ஊன்றி இருந்தால், அந்த வீரன் இயற்கையாக மரணம் அடைந்தார் என்று பொருள். குதிரையின் ஒரு கால் தூக்கிய நிலையில் இருந்தால் அந்த வீரன் போரில் காயமடைந்து பிறகு இறந்தவர் என்று அர்த்தம். முன்னங்கால்கள் இரண்டும் தூக்கிய நிலையில் இருந்தால், அந்த வீரன் போரில் வீர மரணம் அடைந்தார் என்று அர்த்தம். இனி குதிரை சிலைகளை பார்த்தால் இதையும் கவனிங்க..!




## வண்ணக்கோலம்




## மெகந்தி டிசைன்







# அருள்மிகு சேவுகப் பெருமாள் அய்யனார் திருக்கோவில், சிங்கம்புணரி

**ப**ல்லாண்டுகளுக்கு முன்பு, வில்வ வனமாக இருந்த இப்பகுதிக்கு வேட்டையாட வந்த வேடுவர் ஒருவர், மானைக்கண்டு அதன்மீது அம்பு எய்தார். தப்பிய மான் இங்கிருந்த மரப்பொந்து ஒன்றுக்குள் புகுந்து மறைந்தது. அதனை பிடிக்க வேடுவர் முயன்றபோது, புதருக்குள் ஒரு அய்யனார் சிலை இருந்தது. வியப்படைந்த வேடுவன், "சேவுகபெருமாளே. மானைத் தேடிப் போன நான் இன்று முதல் உனக்கு சேவகம் செய்யும் பாக்கியம் பெற்றேன்" என்றதுடன், "பெருமாளே" என்று சொல்லியும் வணங்கினான். அன்று முதல் இவர், "சேவுகப்பெருமாள் அய்யனார்" என்ற பெயரில் காவல்தெய்வமாக அருளுகிறார்.

சாஸ்தா என்றும், ஐயப்பன் என்றும் போற்றப்படும் தெய்வங்களின் அம்சமான அய்யனார் காவல் தெய்வமாகப் பல தலங்களில் அருள்பாலிக்கிறார். இத்தல சேவுகப் பெருமாள் அய்யனார் மிகவும் சக்தி வாய்ந்தவர். சிவனுக்குரிய வில்வ இலையைக் கொண்டு இங்கு பூஜை செய்யப்படுகிறது. மேலும் பெருமாளின் திருநாமம் பெற்றுள்ளார். சிவவிஷ்ணுவின் கூட்டணியில் பிறந்ததால், இத்தகைய சிறப்பு இவருக்கு தரப்பட்டுள்ளது.

தேவர்களின் அரசன் இந்திரன், சாஸ்தாவை வளர்த்து வந்தார். அவரால் வளர்க்க இயலாத சூழ்நிலையில் பூலோகத்தில் உள்ள வேடுவ இனத்தவரிடம் ஒப்படைத்து வளர்க்கக் கூறினார். அவர்கள் அவரை அய்யனாராக பாவித்து காட்டில் மிருகங்களிடம் இருந்து பாதுகாப்பு தர வேண்டி வணங்கினர். காலப்போக்கில் காடுகள் குறைந்து ஊர்கள் பெருகவே ஊரின் எல்லையில் காவல் தெய்வமாக இருக்க வேண்டினர். இவ்வாறு, சாஸ்தாவின் அம்சமான அய்யனார் வழிபாடு உருவாயிற்று.

அய்யனாரைப் போல அய்யப்பனும் இராகு, மாந்தி போன்ற கோள்களின் தீமையை நீக்கும் கடவுளாகத் திகழ்கிறார். "ஐ" என்ற முதல் நிலையோடு "அப்பன்" என்ற தந்தையை உணர்த்தும் சொல் இணைந்து அய்யப்பன் என்ற சொல் விளங்குகிறது. அய்யனார், அய்யப்பன் இரண்டும் ஒருவரையே குறிப்பிடக்கூடிய சொற்கள். அய்யனார் என்பதில் "அன், ஆர்" என்பன சேர்ந்திருக்க அய்யப்பனில் "அப்பன்" சேர்ந்திருக்கிறது. சொல்லில் சேரும் சேர்க்கைகள் தான் வேறாகின்றன. உணர்த்தும் பொருளும் சொற்களின் பொருளும் ஒன்றே.


சேரநாட்டு அய்யப்பனும் காடுகளுக்கு இடையே மேடான இடத்தில் தான் வீற்றிருக்கிறார். சபரிமலை அய்யப்பன் வழிபாடும் தமிழகத்தின் அய்யனார் வழிபாடும் ஒன்றுபோல விளங்குகின்றன. இரண்டும் அந்தந்த சூழலுக்கு ஏற்ப வளர்ச்சி பெற்று இன்று புகழ் பெற்று விளங்குகின்றன.

முழுமுதற்கடவுள் மூவருள்ளும் தலைமை பெற்றவர்கள் "அரியும் அரனும்". இருவரும் ஈன்ற மகனே அரிகரன். அதனால் தான் இந்தப் பகுதியில் (சிவகங்கை மாவட்டத்தில்) சிவன்ராத்திரி அன்று அய்யனார் கோவில்களில் பெரும் சிறப்புடன் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

அய்யப்பன் வரலாறு சேரநாட்டுக்குத் தக்கவாறு மன்னன் மகனாகப் பந்தளநாட்டு இளவரசனாக ஐயப்பன் விளங்குவதை எடுத்துரைக்கிறது. அவன் வாழ்வில் சாதிக்க முடியாதவற்றைச் சாதித்து அவன் மிகச்சிறந்த தலைவனாக காட்சி தருகிறான். சபரிமலை ஐயப்பன் திருவுருவத்திற்கும் அய்யனார் திருவுருவத்திற்கும் பெரும் வேறுபாடு இல்லை. அய்யனைப் போல அய்யனாரும் வீராசனமாகவே வீற்றிருக்கிறார். இரண்டு கைகளை அபயவரதமாக அல்ல செண்டாயுதத்தைப் பற்றிக் கொண்டு அய்யனார் வீற்றிருப்பார். யோகப்பட்டை அணிந்திருப்பார். தலையில் மகுடம் உண்டு. அய்யானாருக்கும் அய்யப்பனுக்கும் உருவ அமைப்பில் பெரும் வேற்றுமை இல்லை.

இத்திருகோவில் அமைந்த இடம் வில்வவனமானபடியால், இங்கு வில்வம் தல விருட்சமாகும். பரிவாரத் தேவதைகள் உட்பட இங்குள்ள அனைத்துத் தெய்வங்களும் வில்வ இலைகளினாலேயே அர்ச்சிக்கப் பெறுகின்றன.





இத்திருக்கோவிலின் தல தீர்த்தம் (புஷ்கரணி) விரிசிலை ஆற்று நீரும், ஆலய உட்பிரகாரத்திலுள்ள வற்றாக்கிணற்று நீரும் ஆகும். பிரகாரத்தில் கன்னிமூல கணபதி, வள்ளி தெய்வானை உடனாய முருகன், பரிவார தேவதைகள், கருப்பண்ணசாமி, கருப்பர், சப்தகன்னியர், நவக்கிரகங்கள், சண்டிகேஸ்வரர் ஆகியோர் உள்ளனர். இத்தலத்து அய்யனார் வீராசனத்தில், தலையில் மகுடம், யோகப்பட்டை அணிந்து, பூரணை, புஷ்கலையுடன் அருள்பாலிக்கிறார். அய்யனாருக்கு வலதுபுறம் காவல் தெய்வமான பிடாரியம்மன், இடதுபுறம் சுயம்பிரகாசேஸ்வரர் என்னும் பூவைவல்லி உடனாய தான்தோன்றீஸ்வரர் தனித்தனி சன்னதியில் எழுந்தருளியுள்ளனர்.

வைகாசியில் தேர்த்திருவிழா. தேர்நிலைக்கு வரும்போது, ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் நேர்த்திக்கடனாக தேங்காய்களை அருகிலுள்ள சுவரில் அடித்து உடைப்பர்.

கேட்டதை கொடுப்பதில் வல்லவரான அய்யனார், ஊரைக்காப்பவராகவும், நெல் விளைச்சலைப் பெருக்குபவராகவும், கால்நடைகளைக் காப்பாற்றுபவராகவும் போற்றப் பெறுகிறார். சனி தோஷம், இராகுதோஷம் நீங்கவும் இவரை வழிபடலாம்.

பிரார்த்தனை நிறைவேறியதும் கன்றுகள் நேர்த்திக்கடனாக செலுத்தப்படுகிறது. சுவாமி அபிஷேகம் செய்தும், வஸ்திரம் அணிவித்தும் நேர்த்திக்கடன் நிறைவேற்றலாம்.

# விவசாயம் காப்போம்

## இயற்கை முறை சின்ன வெங்காய சாகுபடி

**கு**றுகிய காலத்தில் கிடைக்கும் பணப் பயிர்களில் முக்கியமானது சிறிய வெங்காயம்.

வெங்காய சாகுபடியில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்சனைகளில் மிகவும் முக்கியமானது பூச்சி நோய் மேலாண்மை மற்றும் சத்து பற்றாக்குறை.

இயற்கை எதிர் உயிரிணி பூசனம் டிரைக்கோடெர்மா விரிடி, உள்பூசணம் மற்றும் ஆடோமோனாய் பசு சாணம் உள்ளிட்டவைகளைக் கொண்டு, விதை நேர்த்தி செய்து நடுவதால் தண்டு, வேர் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலை உண்ணும் புழுக்களைக் கட்டுப்படுத்த தாவரப்பூச்சி விரட்டிகளையும், நுண்ணுயிர் பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்த வேண்டும்.

ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் அதிகம் காணப்படும் கோழிக்கால் சீக்கு, கீழ்த்தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, டிரைக்கோடெர்மா விரிடி, 5 லிட்டர் கோமியம், 5 கிலோ சாணம் ஆகியவற்றைக் கலந்து, நன்றாக வடிகட்டி ஒட்டும் திரவத்துடன் வெங்காயத் தாள்கள் நன்கு நனையுமாறு காலை வேளையில் 15 நாள்கள் தொடர்ந்து தெளிக்கவும்.

இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த, ஆடோமோனாஸ் (0.6 சதம்) 500 கிலோவை 100 லிட்டர் நீரில் கலந்து ஒட்டும் திரவத்துடன் தெளிக்க வேண்டும்.

வளர்ச்சிப் பருவத்தில் அமிர்தக் கரைசல், பஞ்சகவ்யம், தேங்காய் மோர் கரைசலில் ஏதாவது ஒன்றை 20 நாள்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

அறுவடைக்கு 15 நாள்களுக்கு முன்னர் 100 லிட்டருடன், 5 லிட்டர் புளித்த மோரைக் கலந்து தெளித்தால் காய் திரட்சி மற்றும் நிறத்துடன் இருப்பதோடு, எடையும் அதிகரிக்கும்

### அறிவியல் தகவல்

## ஒளி மின்னழுத்த விளைவு

- சோலார் பேனல்கள் சூரியனிடமிருந்து வரும் ஒளி ஆற்றலை பயன்படுத்தி தான் மின்சாரத்தை உருவாக்குகின்றன.
- நமது சூரியன் ஒரு சிறந்த அணுக்கரு இணைவு நடக்கும் அணுஉலை போன்றது அதாவது சூரியனின் மையப்பகுதியில் தொடர்ந்து ஹைட்ரஜன் அணுக்கள் இணைந்து ஹீலியம் அணுக்களை உருவாக்குகின்றன.
- இவ்வாறு நடைபெறும் அணுக்கரு இணைவு நிகழ்வின்போது மிக அதிகமான ஆற்றல் வெப்பமாகவும் ஒளியாகவும் வெளியிடப்படுகிறது.
- இப்படி சூரியனிலிருந்து வெளிவரும் மொழியில் ஃபோட்டான்கள் இருக்கும். இந்த ஃபோட்டோன்கள் சூரியனில் இருந்து பூமிக்கு வர அதாவது சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தொலைவான 149.6 கிலோமீட்டரை அடைய சுமார் 8.5 நிமிடங்கள் ஆகும்.
- இப்படி வரும் ஃபோட்டான்களை சோலார் பேனல்கள் ஒளிமின்னழுத்த விளைவு மூலம் மின்சாரமாக மாற்றுகின்றன. ஒரு பொருளில் மின்னழுத்தம் மற்றும் மின்சாரத்தை உருவாக்குவது ஒளிமின்னழுத்த விளைவு எனப்படுகிறது.

# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | ■ | 3 | 4 |
| | ■ | | ■ | ■ | ■ | 5 | ■ | |
| 6 | | | | ■ | 7 | | 8 | |
| | ■ | | ■ | 9 | | ■ | | ■ |
| ■ | 10 | | ■ | | ■ | 11 | | ■ |
| ■ | | ■ | 12 | | ■ | | ■ | 13 |
| 14 | | 15 | | ■ | 16 | | | |
| | ■ | | ■ | ■ | ■ | | ■ | |
| 17 | | ■ | 18 | | | | | |

**வலமிருந்து இடம்:**

1. புரட்சிக்கவிஞர் (6)
3. பால் தரும் (2)
6. பலகாரங்கள் செய்யத் தேவையானது (4)
7. வர்த்தகம் (4)
9. சிற்பிகள் செதுக்குவது (2)
10. வெளிச்சம் (2)
11. அரையில் பாதி; ஒருக்கால் தெரியாவிட்டால் நன்றாக யோசிக்கவும் (2)
12. ஆங்கில வெடிகுண்டு (2)
14. புதிர்; "கதை விடு"ம் முயற்சி வேண்டாம் (4)
16. கூடுதலும் இல்லாத குறைதலும் இல்லாத நடுத்தரமான அளவு (4)
17. இது எட்டு என்பார்கள்(2)
18. சனிக்கிழமை தோறும் ஒலிக்கும் மணி (6)

**மேலிருந்து கீழ்:**

1. ராமேஸ்வரம் அருகே உள்ள புகழ்பெற்ற பாலம் (4)
2. ஸ்க்ரூட்ரைவர்- தமிழில்; கரைக்க இயலாத புளி (5)
4. இசைக்கு மிக முக்கியம் (3)
5. ஆசிரியர்களை இதற்கு ஒப்பிடுவார்கள் (2)
7. மீன் பிடிக்க உதவும்; தெரியாவிட்டாலும் கவலை வேண்டாம். (2)
8. கண்ணுக்கு இதை ஒப்பிடுவர் (3)
9. ________ புறம் நீட்டாதீர் (3)
10. இணைத்தலைக் குறிப்பிடும் சொல் (3)
11. கல்விக்கண் திறந்த முன்னாள் முதல்வர்
12. வழி (பாதை)
13. அசைவ உணவு; முதல், கடைசி எழுத்து இணைந்தால் நோயைக் குறிப்பிடும் (4)
14. திருநீறு (3)
15. முகத்தில் 2 வண்டு (2)

### சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

1. பணம் 2. கொசு 3. பூசணிக்கொடி 4. குடை 5. தொலைபேசி

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

Publisher : R.Rajesh
Editor : Saranya Rajesh
Marketing Executive : M.C.Rajan
Designer : S.Aswini
This is only Concern of Express Velachery

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## தமிழோடு விளையாடு!

### வார்த்தை தேடு

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 15 வண்ணங்களின் பெயர்களின் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ | பை | ந் | நீ | ல | ம் | ஐ | இ | ஊ | சி |
| ஏ | ஊ | ஊ | ப | ஏ | இ | அ | ள | அ | வ |
| ஓ | அ | ஏ | ச் | க | ஓ | ஓ | ம | அ | ப் |
| சா | ஏ | உ | சை | ரு | சு | அ | ஞ் | அ | பு |
| ஐ | ம் | எ | ஈ | ப் | ஞ் | நீ | ச | ம் | ஒ |
| ஊ | ஏ | ப | ஐ | பு | ர | ல | ள் | ற | மை |
| தா | ஈ | ஈ | ல் | ஏ | ஆ | ம் | வெ | நி | ண் |
| ஒ | இ | ள | ம் | ப | ச் | சை | ள் | க | வெ |
| எ | க | ட | ல் | நீ | ல | ம் | ளை | ங் | னி |
| எ | அ | ட | ர் | நீ | ல | ம் | உ | த | ப |

### சென்ற வார வார்த்தை தேடு விளையாட்டிற்க்கான விடைகள்

15 பூக்களின் பெயர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | ணி | ச் | சி | கை | எ | கூ | ஏ | வ | இ |
| கூ | எ | எ | வெ | ஆ | ஆ | வி | ஓ | ட | எ |
| வி | ஏ | ஒ | ஊ | ட் | ஏ | ள | ஈ | வ | று |
| ர | ஒ | உ | ஒ | வை | சி | ம் | க | ன | ழ |
| ம் | ல் | உ | ரு | ல் | ர | சூ | ள் | ம் | ம் |
| ம் | ப | எ | ஐ | வே | ர | ல் | ளி | ப | இ |
| ச | ம் | ஔ | சி | ளை | எ | ழ் | யி | ஆ | ரை |
| ச் | ஆ | உ | ஞ் | வ | எ | னி | தூ | ஏ | வி |
| னி | ஈ | எ | றி | கு | ஊ | எ | அ | ந் | ஆ |
| அ | இ | எ | கு | ஊ | ஏ | ஒ | எ | ஔ | உ |

### இணைச் சொற்களை கண்டுபிடியுங்கள்

**ஆகம்**

________ ________ ________ ________

ஆக்கை | தவம் | நலம்
யாக்கை | ஆகு | தேகம்

### சென்ற வார குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

**இடமிருந்து வலம்:**

1. உழவர் 2. அத்தை 4. பல்லவர் 7. காளை 8. பாசம் 9. தந்தி 11. புரளி 13. ரவி 14. சங்கதி 15. மைக்கேல் ஜாக்சன்

**மேலிருந்து கீழ்:**

1. உத்திராஞ்சல் 2. வந்தே மாதரம் 3. அலகாபாத் 5. தொகுப்பு 6. சந்திரமதி 8. பாத்திரம் 10. மூஞ்சூறு 12. பகல்

## அறுசுவை சமையல்

### காலிஃபிளவர் வடை

**தேவையானவை :**

பொடியாக நறுக்கி வேகவைத்த காலிஃபிளவர் - ½ கப்
கடலை மாவு - 2 டீஸ்பூன்
கசகசா - 1/4 டீஸ்பூன்
கொத்தமல்லி - சிறிதளவு
உப்பு - தேவைகேற்ப
மிளகாய் தூள் - அரை டீஸ்பூன்
பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் - 1

**செய்முறை :**

❖ ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி கொதிக்கவைத்து அதில் பொடியாக நறுக்கிய காலிஃபிளவர் போட்டு ஒரு கொதி வந்ததும் வடிகட்டி வைத்து கொள்ளவும்.

❖ மற்றொரு பாத்திரத்தில் வடிகட்டிய காலிஃபிளவர், கடலை மாவு, கசகசா, கொத்தமல்லி, உப்பு, மிளகாய் தூள், பச்சை மிளகாய், சிறிதளவு தண்ணீர் ஊற்றி நன்றாக கெட்டியாக பிசைந்து கொள்ளவும்.

❖ பிறகு, சிறு சிறு உருண்டைகளாக எடுத்து வடை போல் தட்டி, கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் போட்டு பொன்னிறமாக வறுத்து எடுத்தால் சுவையான காலிஃபிளவர் வடை ரெடி..

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........



மருத்துவர் : பல்லு எப்படி விழுந்திச்சு?
நோயாளி : அத வேற யாருகிட்டயாவது சொன்னா மீதி பல்லும் கொட்டிரும்னு என் மனைவி சொல்லியிருக்கா டாக்டர்...

******

மருத்துவர் : நீங்க உடனடியா மீன், ஆடு, கோழி சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.
நோயாளி : அதுங்க சாப்பிடுவதை நான் எப்படி டாக்டர் நிறுத்த முடியும்...

******

நோயாளி : இரண்டு நாளைக்கு ஆபரேஷனை தள்ளிப்போட முடியுமா டாக்டர்?
மருத்துவர் : ஏன்?
நோயாளி : இந்த இரண்டு நாளுக்குள்ள என்னோட கடைசி ஆசையை நிறைவேத்திக்கறதுக்குத் தான்.

******

நோயாளி : டாக்டர், எனக்கு 3 மாதமா கடுமையான இருமல்...
மருத்துவர் : அப்படியா? சும்மாவா இருந்தீங்க?
நோயாளி : இல்ல டாக்டர் இருமிக்கிட்டு தான் இருந்தேன்...

******

### விடுகதை விளையாட்டு

1. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது. - அது என்ன?
2. படபடக்கும், பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் - அது என்ன?
3. உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு, - அது என்ன?
4. தாத்தா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல் - அது என்ன?
5. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?

### சுடோக்கு விளையாட்டு

கட்டத்தில் உள்ள எண்களுக்கு ஏற்ப சரியான விடையை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | | 4 | | |
| 7 | | | | | 3 | 6 | | |
| | | | | 9 | 1 | | 8 | |
| | | | | | | | | |
| | 5 | | 1 | 8 | | | | 3 |
| | | | 3 | | 6 | | 4 | 5 |
| | 4 | | 2 | | | | 6 | |
| 9 | | 3 | | | | | | |
| | 2 | | | | | 1 | | |

### சென்ற வார சுடோக்கு விளையாட்டிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 6 | 3 | 1 | 4 | 9 | 5 | 8 |
| 8 | 5 | 4 | 9 | 6 | 2 | 7 | 1 | 3 |
| 9 | 1 | 3 | 8 | 7 | 5 | 2 | 6 | 4 |
| 4 | 6 | 8 | 1 | 2 | 7 | 3 | 9 | 5 |
| 5 | 9 | 7 | 4 | 3 | 8 | 6 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 5 | 9 | 6 | 4 | 8 | 7 |
| 3 | 2 | 5 | 7 | 8 | 9 | 1 | 4 | 6 |
| 6 | 4 | 1 | 2 | 5 | 3 | 8 | 7 | 9 |
| 7 | 8 | 9 | 6 | 4 | 1 | 5 | 3 | 2 |

TNBIL04133 R.Dis.No.1845/2014


*நீதிக் கதைகள்*

# வெட்டுக்கிளியும் ஆந்தையும்



அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு இரக்கமற்ற ஆந்தை ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் மதிய வேளையில் மரப்பொந்து ஒன்றில் அந்த ஆந்தை தூங்கிக் கொண்டிருந்தது.


அந்த நேரத்தில் புல்தரையின் கீழே வெட்டுக்கிளி ஒன்று பாட்டுப் பாடிக்கொண்டே வந்தது. வெட்டுக்கிளியின் அந்த பாட்டுச்சத்தம் ஆந்தையின் தூக்கத்தை கெடுத்தது. உடனே ஆந்தை அந்த வெட்டுக்கிளியிடம்,




வெட்டுக்கிளியோ அதை கேட்காமல் அந்த மரத்தின் கீழே பாடிக்கொண்டிருந்தது. மேலும் ஆந்தையைப் பார்த்து,




தினமும் ஒரே மாதிரியான உணவினை சாப்பிட்டுவந்த ஆந்தைக்கு அந்த வெட்டுக்கிளி சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. தந்திரத்தால்தான் வெட்டுக்கிளியை அடக்க வேண்டும் என்று தீர்மானித்து.



"நண்பனே, என்னைத் தூங்கவிடாமல் நீ செய்ய விரும்பினால் செய்துவிட்டுப் போ. ஆனால் விழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இனிமையாய் இருக்கும் பொருட்டு உன் சங்கீதம் உபயோகப்பபட்டுமே உன் சங்கீதம் இனிமையானது. அதை இன்னும் மெருகேற்ற என்னிடம் ஓர் அமிர்தம் இருக்கிறது. அந்த அமிர்தத்தை இரண்டு துளி நீ சாப்பிட்டால் போதும். உன் குரலும் அமிர்தமாய் விடும். மேலே வா தருகிறேன்", என்றது ஆந்தை.

ஆந்தையின் நயவஞ்சக பேச்சைக் கேட்டு மயங்கிய வெட்டுக்கிளி மரத்தில் ஏறி ஆந்தையின் அருகில் சென்றது. அருகில் வந்த வெட்டுக்கிளியை ஆந்தை பிடித்து நசுக்கிக் கொன்றது.



**நீதி:**
பயமுறுத்தலை விட நயவஞ்சகம் பலமானது.

ஹோட்டல் CJ HOTEL
பாஸ்ட்புட் & பிரியாணி
சைவம் & அசைவம்



ஸ்ரீஅங்காளம்மன் துணை
78679 82030
CJ
ஹோட்டல் சைவம் & அசைவம்
மீன்குழம்பு சாப்பாடு
சிக்கன் பிரியாணி
புரோட்டா
சப்பாத்தி
இட்லி
தோசை
பாஸ்ட்புட்



டிபன், சாப்பாடு ரெடி
C.J. Hotel Rent, No.41/5,
Gandhi Road, Velachery,
Chennai - 600 042.
(Near Periandavar Super Market Opposite)
table chair, பாத்திரங்கள் உட்பட வாடகைக்கு விடப்படும். எங்கள் ஹோட்டல் கடையும் வாடகைக்கு விடப்படும்.
Party order under taken
Contact : 7867982030/ 8524876501

RP-Sanjiv Goenka Group
spencer's
*FREE SUGAR 1KG
On Shopping worth of ₹799 & above
*Applicable only on Phone Delivery



CALL NOW: FASTEST HOME DELIVERY WITHIN 3 hrs!*
TEXT TO ORDER on WhatsApp 9007470000
InstaCall India's Grocery Helpline 02192-686868
PHONE DELIVERY CALL NOW
76050 14056
90808 11561
WANTED RIDER FOR DELIVERY EARN UPTO ₹17300*/- PER MONTH

DVK
DVK HOSTEL LADIES
KAVITHA. V
Proprietor
No - 106A, 1st floor, Gandhi Road, Velachery, Chennai - 600042 Near - Old Ration Shop
dvkhostel@gmail.com
9884870414, 7449073222, 044 - 48680201
Our Hostel Facilities
- We are providing - 2,3,4- Sharing Rooms available.
- Separate TV for Every Rooms
- Attached Bathrooms
- Wardroble facilities
- Washing Machines
- Geyser ( Heater)
- Wi-Fi Zone
- Food (VEG- NoN VEG)
- Two Wheeler and Car Parking
- Water - Purity Guaranteed

ADDRESS: No - 106A, 1st floor, Gandhi Road, Velachery, Chennai - 600042
Contact number: 9884870414

Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH